டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 15.07.2026 புதன்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 023 - Madurai | Online Edition

### பிரதமரின் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களை முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ்

# இரண்டு லட்சம் நிறுவனங்கள் கடனுதவிப் பெற்று வரலாற்றுச் சாதனை

## மத்திய அமைச்சர் சிராக் பஸ்வான் பாராட்டு

புது தில்லி, ஜூலை 14

பிரதமரின் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களை முறைப் படுத்துதல் திட்டத்தின் கீழ், இரண்டு லட்சத்திற்கும் அதிகமான உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்குக் கடன் பெறுவதற் கான அனுமதி வழங்கப்பட்ட வரலாற்றுச் சாதனையை கொண்டாடும் வகையில், மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் தலைமையில், புது தில்லியில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

2 லட்சம் நிறுவனங்களுக்கு கடனுதவி பெறுவதற்கான அனுமதி வழங்கப்பட்ட நிலையில், இத்திட்டம் ரூ.20,300 கோடிக்கும் அதிகமான முதலீடுகளை ஈர்த்துள்ளது. இத் திட்டத்தின் பயனாளி களில், 90 சதவீதம் பேர் முதல் தலைமுறை தொழில்முனை வோராகவும், 44 சதவீதம் பேர் பெண் தொழில்முனைவோராகவும் உள்ளனர். மேலும், இத்திட்டத்தின் கீழ், 75,000-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உதயம் ஆதார், உதயம் அசிஸ்ட், எப்எஸ்எஸ்ஏஐ, ஜிஎஸ்டி போன்ற பதிவுகள் மூலம், முறைசார் பொருளாதார நடைமுறைகளில் இணைந்து உள்ளன. இத்திட்டம், 11 லட்சம் நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மத்திய உணவு பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள், மாநில அரசுகளின் பிரதிநிதிகள், இத்திட்டத்தில் இணைந்துள்ள பிற அமைச் சகங்கள், வங்கிகள், மேம்பாட்டுக் கூட்டமைப்பினர், தொழில்முனைவோர், சுயஉதவிக் குழுக்கள், வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய சிராக் பாஸ்வான், இரண்டு லட்சம் பயனாளிகள் என்ற இந்தச் சாதனை, நாடு முழுவதும் அளவிடக்கூடிய விளைவுகளாக மாறி வருகிறது என்பதை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளது என்று கூறினார். மேலும், இத்திட்டத்தின் மொத்தப் பயனாளிகளில் 44 சதவீதம் பேர் பெண் தொழில்முனைவோர்கள் என்பது, பெண்கள் தலைமையிலான வளர்ச்சியின் உண்மையான சாராம்சம், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கை என்று அவர் தெரிவித்தார்.

பீகார், மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட முன்னணி மாநிலங்களின் செயல்பாடுகளுக்கு அமைச்சர் பாராட்டுத் தெரிவித்தார். எனவே, இந்த குறிப்பிடத்தக்க சாதனையைக் கொண்டாடுவதற்கான நிகழ்வாக இருப்பதுடன், இது இந்தியாவின் உணவு பதப்படுத்துதல் துறையின் வளர்ச்சியை அடுத்த நிலையை அடைவதற்கான வலுவான அடித்தளமாகும் என்று அவர் குறிப்பிட்டார். மேலும், 'ஒரு தேசியக் கொள்கையை தொழில் மேம்பாட்டிற்கான ஒரு இயக்கமாக' மாற்றியமைத்ததற்காக மாநில அரசுகள், மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் களப் பணியாளர்களுக்குப் பாராட்டு தெரிவித்தார்.

இத்திட்டத்தின் தொடக்க மூலதன ஆதரவின் கீழ் 4.18 லட்சத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஆதரவளிக்கப்பட்டுள்ளதையும், 27 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சகத்தின் 80 பொது வான முதலீட்டு மையங்களின் வலையமைப்பில், 32 மையங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளதையும், அமைச்சர் எடுத்துரைத்தார். இத்திட்டத்தின் கீழ் 1.76 லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும், அவர்களில் 77 சதவீதம் பேர் பெண்கள் என்றும் சிராக் பாஸ்வான் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் சாதனைகளை விளக்கும் வகையில், முக்கிய வெளியீடுகளை வெளியிடுதல், தொழில்முனைவோரின் வெற்றிக் கதைகளைப் பகிர்ந்து கொள்ளுதல், தாக்கத்தை வெளிப்படுத்தும் நிறுவனங்களைச் சேர்ந்த திட்டப் பயனாளிகளுடன் கலந்துரை யாடல் போன்றவை இந்நிகழ்ச்சியின் சிறப்பம்சங்களாக அமைந்தன.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

# பொன்னமராவதியில் உழவர் திறள் பரவலாக்கம் பயிற்சி நடைபெற்றது



புதுக்கோட்டை, ஜூலை 14

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரத்தில் வேளாண்மை துறை அட்மா மாநில விரிவாக்க உறுதி சீரமைப்பு திட்டத்தின் கீழ் நல்லூர் வருவாய் கிராமத்தில் இல்லனிப்பட்டி கிராமத்தில் உழவர் திறள் பரவலாக்கம் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு புதுக்கோட்டை மாவட்டம் வேளாண்மை துணை இயக்குனர் மத்திய அரசு திட்டம் செல்வி, தலைமை வகித்து இயற்கை வேளாண்மை பயன்பாடு குறித்தும் பஞ்சகாவியா மீன் அமிலம் தயாரிக்கும் முறையினை பசுந்தாள் உரங்கள் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் பற்றியும் விரிவாக விவசாயிகளிடம் எடுத்துரைத்தார்.

மேலும் இப்பயிற்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வேளாண்மை அறிவியல் நிலையம், வம்பன் மூத்த வேளாண்மை விஞ்ஞானி ராம் ஜெகதீஷ், கலந்து கொண்டார். வேளாண் விஞ்ஞானி பேசுகையில் விவசாயிகளுக்கு நெற்பயிரில் தாக்கும் பூச்சிகள் நோய்கள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகளை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மேலும் விவசாயிகளிடம் ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றியும் ஆடு, மாடு வளர்ப்பு பற்றியும் அதன் மூலம் லாபகர மாக விவசாயம் செய்வதற்குக்கான முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். மேலும் பொன்னமராவதி வட்டார உதவி இயக்குனர் க.ரஹ்மத் நிசா பேகம், பேசுகையில் வேளாண் திட்டங்கள் திட்டங்கள் பற்றியும் நமது வட்டாரத்தில் உழவர் அடையாள அட்டை பதிவு செய்வதன் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் துணை வேளாண்மை அலுவலர் பேசுகையில் நுண்ணீர் பாசன திட்டத்தை பற்றியும் மண் பரிசோதனை செய்வதன் மூலம் அதன் மூலம் ஏற்படும் நன்மைகள் பற்றியும் அவற்றின் முக்கியத்தும் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் பயிற்சிக்கான முன் ஏற்பாடுகளை உதவி தொழிற் நுட்ப மேலாளர்கள் பிரசாத் மற்றும் நவீன் குமார் ஆகியோர் செய்து இருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வெப்ப அலை விழிப்புணர்வு 2026

# வேளாண் பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

செங்கல்பட்டு, ஜூலை 14

எல் நினோ நிகழ்வினால், காலநிலையில் இந்த ஆண்டு அதிக அளவு மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பசிபிக் பெருங்கடலில் ஏற்பட்டுள்ள எல் நினோ நிகழ்வினால், நடப்பு ஆண்டு தென் மேற்கு பருவ மழை மிகவும் பாதிக்கப்படும். இதனை எதிர்கொள்ளும் வகையில் கீழ்க்காணும் முன்னெச்சரிக்கை மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செங்கல்பட்டு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) து.செல்வபாண்டியன் அறிவுறுத்தினார்.

I. பொதுவான அறிவுரைகள்

- விதை நேர்த்தி செய்ய வேண்டும்.
- உயிர் உரங்கள் அதிகளவில் பயன்படுத்த வேண்டும்.
- நண்பகலில் நீர்ப்பாசனம் செய்வதைத் தவிர்க்கவேண்டும்.
- பயிர்களுக்கு இடையே தகுந்த இடைவெளி மற்றும் கவாத்து முறைகளை மேற்கொண்டு காற்றோட்டத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.
- மண் ஈரப்பதத்தைப் பாதுகாக்க மேற்புற வெப்பநிலையைக் குறைக்கவும் இயற்கை முறை மூடாக்குகள் (வைக்கோல், கரும்புத் தோகை) ஏற்படுத்த வேண்டும்.
- வறட்சியை எதிர்கொள்ள நுண்ணீர்ப்பாசன முறைகளை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும்.
- நாற்றங்கால்கள் மற்றும் அதிக மதிப்புடைய காய்கறித் தோட்டங்களுக்கான நிழல் வலைகள் அல்லது தற்காலிக நிழல் அமைப்புகளும், குறுகிய காலத்திற்கு 30-50% நிழல் தரக்கூடிய நிழல் வலைகளைப் பயன்படுத்தலாம்.
- விரைவில் அழுகக்கூடிய பயிர்களில் அதிகாலையில் அறுவடை மேற்கொள்ள வேண்டும்.
- இலை வழி பயிர் ஊக்கிகளை நல்ல தரமான நீரைப் பயன்படுத்தி தெளிக்கவேண்டும்.
- வானிலை மாற்றங்கள் மற்றும் பருவமழை துவக்கம் குறித்த தகவல்களை ஊடகங்கள் மூலம் தெரிந்து கொள்ள வேண்டும்.

● அதிக வெப்ப நேரமான மதியம் 12 மணி முதல் 3 மணி வரையிலான காலத்தில் வேலை செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

● வெப்பத்தைத் தாங்கக்கூடிய பயிர் இரகங்களையும், குறுகிய கால இரகங்களையும் சாகுபடி செய்ய வேண்டும்.

● பயிர்களின் பூ (ம) காய் பிடிக்கும் பருவங்கள் அதிக வெப்பத்தினால் பாதிக்காத வண்ணம் விதைப்புத் தேதியை மாற்றி விதைக்க வேண்டும்.

**II. பயிர் வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்**

**நெல்**

● பல்வேறு பயிர் வளர்ச்சி நிலைகளில் 3% கயோலின் (Kaolin) அல்லது 1% பொட்டாசியம் குளோரைடு (KCl) கரைசலை இலைவழியாகத் தெளிக்க வேண்டும்.

● பிபிஎஃஎம் (PPFM - Pink Pigmented Facultative Methylotrophs நுண்ணுயிரிகள்) எக்டருக்கு 500 மில்லி வீதத்தில் 15 நாட்கள் இடைவெளியில் இலைவழியாகத் தெளிக்க வேண்டும்.

● தானியங்கள் முதிர்வடைவதற்கு 15 நாட்களுக்கு முன்னரும், பூக்கும் பருவத்திலும் 2% மோனோஅம்மோனியம் பாஸ்பேட் (MAP) + 1% பொட்டாசியம் குளோரைடு (KCl) கரைசலை இலைவழியாகத் தெளிக்க வேண்டும்.

● வளர்ச்சிப் பருவத்தில் (குறுவைப் பருவத்தின் போது) 1% பொட்டாசியம் குளோரைடு (KCl) + சைகோசல் (CCC) 500 ppm அளவில் கரைசலை இலைவழியாகத் தெளிக்க வேண்டும்.

**பயறு வகைகள்**

● பூ பிடிக்கத் தொடங்கும் நிலையில், TNAU பயறு ஒன்டர் (TNAU Pulse Wonder) கலவையை ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் 200 லிட்டர் நீரில் இலைவழித் தெளிப்பாகப் பயன்படுத்த வேண்டும்.


● பூப்பதற்கு முந்தைய நிலையிலும், அதன்பின் 15 நாட்கள் கழித்தும், பூ உதிர்வதைக் குறைப்பதற்காக 100 ஸ்ரீஸ்ரீது செறிவுள்ள சாலிசிலிக் அமிலம் (Salicylic acid) அல்லது 40 ppm செறிவுள்ள நாஃப்தலின் அசிட்டிக் அமிலம் (NAA) கலவையை இலைவழித் தெளிப்பாகப் பயன்படுத்த வேண்டும்.

**நிலக்கடலை**

● பூக்கள் உதிர்வதைக் குறைக்கவும், காய்கள் நன்கு திரளவும், அதிகபட்ச பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவங்களில், 200 லிட்டர் நீரில் 2 கிலோ (ஒவ்வொரு முறை தெளிக்கும்போதும்) என்ற அளவில் TNAU நிலக்கடலை ரிச் ('TNAU Groundnut Rich')-ஐ கலந்து இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும்.

● மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்க பாலித்தீன் படல மூடாக்கு (Polythene film mulching) அமைக்க வேண்டும்.

# பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் சேலம் வட்டார விவசாயிகள் பயன்பெற அழைப்பு





சேலம், ஜுலை 14

சேலம் மாவட்டத்தில் எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளால் இழப்பு ஏற்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கவும், நிலையான வருமானம் கிடைக்க செய்து அவர்களை விவசாயத்தில் நிலைபெற செய்யவும் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சேலம் வட்டாரத்தில் காரீப் பருவத்தில் சோளம் மற்றும் நிலக்கடலை பயிர்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் இணைந்து பயன் பெறலாம். தற்போது 2026 ஜுலை முதல் ஆகஸ்ட் மாதம் வரை சோளம் பயிருக்கு ரூ.204/ஏக்கர் மற்றும் நிலக்கடலை பயிருக்கு ரூ.447/ஏக்கர் வீதம் பிரீமியம் தொகை செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம்.

நில அடங்கல், நில உரிமை பட்டா, ஆதார், வங்கி கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்களுடன் அருகே உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், வணிக வங்கி மற்றும் பொது சேவை மையம் மூலமாக 17.08.26 க்குள் பிரீமியம் தொகை செலுத்தி விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து பயன்பெற சேலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# உரங்களை அதிகபட்ச விலைக்கு மிகாமல் விற்பனை செய்ய வேண்டும்

பெரம்பலூர், ஜுலை 14

பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூர் வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் அறிவுரையின்படி, பெரம்பலூர் வட்டாரத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தனியார் உர விற்பனை நிலையத்தை ஆய்வு செய்தார். ஆய்வின் போது தற்போது உரங்களின் ஒரு மூட்டையின் விலை யூரியா ரூ.266.50, டி ஏ பி ரூ.1350, பொட்டாஷ் ரூ.2200, கூட்டு உரங்கள் 20:20:0:13 ஸ்பீக், ஃபேக்ட், ரூ.2100, மற்ற நிறுவனங்கள் ரூ.2150, 15:15:15 ரூ.2200, 10:26:26 ரூ.2250, ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட் ரூ.1350, சூப்பர் பாஸ்பேட் குருணை ரூ.775 மற்றும் அமோனியம் சல்பேட் ரூ.1400. ரசாயன உரங்களின் விலைகள் அவ்வப்போது மாறுவதால், விவசாயிகள் உரம் வாங்கும் போது உரம் மூட்டையில் உள்ள அதிகபட்ச விலைக்கி மேல் வாங்காமல் வாங்க வேண்டாம். ரசாயன உரங்களின் விலைகள் மிக அதிக அளவில் இருப்பதால், விவசாயிகள் ஒருங்கிணைந்த உரம் மேலாண்மையுடன், சமச்சீர் விகிதத்தில் அனைத்து வகையான இயற்கை மற்றும் உயிர் உரங்களுடன், குறைவான ரசாயன உரங்களை பயன்படுத்தி, அதிக மகசூல் பெறலாம் மற்றும் மண்வளத்தின் காக்கலாம்.



உரங்களை வாங்கும் போது, கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு பி ஓ எஸ் இயந்திரம் மூலம் விற்பனை பில் அதில் தங்களின் முகவரி மற்றும் தொலைபேசி என்னுடன் வாங்க வேண்டும்.

ஆதார் கார்டு இல்லாமல் உரங்கள் வாங்க முடியாது. விவசாயிகள் உரங்கள் மேற்கண்ட உரிமம் பெற்ற உர விற்பனை நிலையங்களில் மட்டுமே உரங்கள் வாங்க வேண்டும். விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன் படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ், ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட், டி ஏ பி உரங்களையும் பயன்படுத்த வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங்களும் அதிக அளவு விவசாயிகள் வாங்க கூடாது. பயிரின் அளவிற்கு தகுந்தார் போல் அடி உரமாக பயன்படுத்தலாம். யூரியா மற்றும் டிஏபிக்கு பதிலாக யூரியா, நானோ டி ஏ பி விவசாயிகள் பயன்படுத்துவதால், உர செலவு குறைத்து, மண்வளத்தை காத்து, அதிக மகசூல் பெறலாம். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன் படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம்.

சில்லறை உரம் விற்பனையாளர்கள், மொத்த உரம் விற்பனை யாளர்களிடம் உரம் வாங்கும் போது, அனுமதி பெற்ற விற்பனை நிலையத்துக்கு இன்வாய் உடன் வாங்கும்போது இன்வாய்ஸில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள விற்பனை நிலையத்தில் மட்டுமே உரங்களை இருப்பு வைக்க வேண்டும், வேறு ஒரு உரிமம் பெற்ற நிலையத்தில் இருப்பு வைத்திருந்தால் அது தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி மீறிய செயலாகும். இப்படி இருப்பதை அறியப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படும். அனைத்து உரம் விற்பனையாளர் களும் கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு பி ஓ எஸ் பில் போட்டு, விவசாயிகளுக்கு கண்டிப்பாக உரம் வாங்கியதற்கான விற்பனை பில் அவசியம் தர வேண்டும். உரங்கள் விற்பனை செய்யும் போது விற்பனை பில் முகவரி மற்றும் தொலைபேசி நம்பர் இல்லாமல் விற்பனை செய்யப்படுவது, அனுமதி பெறாத இடத்தில் உரம் இருப்பு வைப்பது, விற்பனை விலைப் பலகை பராமரிக்காமல் இருப்பது அறிந்தால், உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப் படும். சில்லரை உரம் விற்பனையாளர்கள் விற்பனை நிலையத்தில் இருப்பு பதிவேடு இருப்பு, பி ஓ எஸ் இயந்திரத்தின் இருப்பு, உண்மை இருப்பு உரங்கள் எப்போதும் சரியாக வைத்திருக்க வேண்டும். விற்பனை பில் கண்டிப்பாக விவசாய முகவரி இல்லாமல் விற்பனை செய்யக்கூடாது. உரம் விற்பனை நிலையத்தில் உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடக்கவில்லை என்றால், ஆய்வின்போது உரிய நடவடிக்கை எடுத்து உரம் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப் படும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

# பயிர்களில் நூற்புழு [Nematode] மேலாண்மை குறித்த களப்பயிற்சி மற்றும் வயல்வெளி ஆய்வு




விருதுநகர், ஜூலை 14

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டாரத்தின், தேனூர் கிராமத்தில், வேளாண்மைத் துறையின் ஏற்பாட்டில், வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK), அருப்புக் கோட்டையின் ஒத்துழைப்பு உடன் பயிர்களில் நூற்புழு (Nematode) மேலாண்மை குறித்த களப்பயிற்சி 13.07.26 அன்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து வெங்காயம் மற்றும் கரும்பு சாகுபடி வயல்களில் இணைந்த வயல்வெளி ஆய்வு (Joint Field Diagnostic Visit) மேற்கொள்ளப்பட்டு, விவசாயிகளுக்கு அவர்களின் வயல் நிலைமைகளுக்கு ஏற்ற நடைமுறை மற்றும் இடவசதிக்கேற்ற பயிர் மேலாண்மை ஆலோ சனைகள் வழங்கப்பட்டன.

தொடக்க நிகழ்வில், வேளாண்மை அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டையின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் மு. ராமசுப்பிரமணியன் மற்றும் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை வல்லுநர் முனைவர் சீ.கிருஷ்ண குமார் ஆகியோர், பயிர்களில் நூற்புழு (Nematode) தாக்குதலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதன் அவசியத்தையும், ஒருங் கிணைந்த நூற்புழு மேலாண்மை தொழில்நுட்பங்களைப் பின்பற்றி நிலையான வேளாண்மை உற்பத்தியை மேம்படுத்து வதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தனர். வேளாண்மை துறையில் உள்ள திட்டங்கள் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து உதவி வேளாண்மை இயக்குநர் கீதா, தெளிவாக எடுத்து கூறினார்.

இந்நிகழ்ச்சி மூலம் விவசாயிகள் பயிர்களில் ஏற்படும் நூற்புழு பாதிப்புகளை சரியான நேரத்தில் கண்டறிந்து, அறிவியல் அடிப் படையிலான பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்களைப் பின்பற்றி அவற்றை திறம்பட கட்டுப்படுத்தும் நடைமுறை அறிவைப் பெற்றனர். மேலும், வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK) மற்றும் வேளாண்மைத் துறை இணைந்து செயல்பட்டதன் மூலம்,

விஞ்ஞானிகள் - விவசாயிகள் இடையேயான கலந்துரையாடல் வலுப்பெற்று, கிராமப்புற அளவில் வேளாண் தொழில்நுட்பங்கள் திறம்பட பரவுவதற்கு இந்நிகழ்ச்சி சிறந்த தளமாக அமைந்தது. வெங்காயம் மற்றும் கரும்பு சாகுபடி வயல்களுக்கு நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டு, அந்தந்த வயலின் நிலைமைக்கு ஏற்ற தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மண் ஆரோக் கியம், சமச்சீர் உர மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விவசாயிகளின் விழிப்புணர்வு மேம்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை அலுவலர் களும் கலந்து கொண்டனர். நாற்பதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# சாகுபடி செலவை குறைக்க உதவும் இயற்கை உரங்கள்



இரசாயன உரங்களின் விலை உயர்வு காரணமாக விவசாயிகள், தங்களுடைய சாகுபடி செலவை கணிசமாக குறைக்க இயற்கை உரத்தை பயன்படுத்த தொடங்கி உள்ளனர். இதனால் கால்நடைகளின் சாணத்திற்கு அதிக கிராக்கி ஏற்பட்டு உள்ளது.

**இரசாயன உரங்களின் விலையேற்றத்திற்கு என்ன காரணம்?**

ஈரான் போர் பதற்றம், கச்சா எண்ணெய் விலை உயர்வு போன்ற முக்கிய காரணமாக உரங்களின் விலை கடுமையாக தற்போது உயர்ந்துள்ளது. இந்த விலையேற்றத்தால் விவசாயிகள் மகசூல் எடுக்க அதிக செலவுகளை சந்திக்க நேரிடுகிறது.

**இரசாயன உரங்களின் தற்போதைய விலை நிலவரம் என்ன?**

1) டி.ஏ.பி 1 மூட்டை= 2500
2) யூரியா1 மூட்டை =290
3) காம்ப்ளக்ஸ் = 2500
4) பொட்டாஷ் = 2300
5)சல்பேட் = 1500
6) சூப்பர் பாஸ்பேட் = 800

என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. உரங்கள் மூட்டைக்கு 300லிருந்து 500 வரை விலை அதிகரித்துள்ளது.

**சாகுபடி செலவு அதிகரிக்க என்ன காரணம்?**

கூலி ஆட்களின் கூலி உயர்வு, எரிபொருள் விலை ஏற்றத்தால் டிராக்டர் உழவு அறுவடை இயந்திர பயன்பாடுகள் மற்றும் இடுபொருட்கள் (விதை, உரம், பூச்சி மருந்து) விலை உயர்வு உள்ளிட்ட விவசாய பணிக்கான செலவுகளும் உயர்ந்துள்ளன. இதனால் கூடுதலான வருமானம் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமை ஏற்பட்டுள்ளது.

**செலவை கட்டுப்படுத்த உதவும் இயற்கை உரங்கள் என்னென்ன?**

மாட்டு சாணம், ஆட்டு சாணம், மண்புழு உரம், பசுந்தாள் உரம், ஜிவமிர்த கரைசல், மீன் அமினோ அமிலம், உயிர் உரங்கள் (BIO FERTILIZERS) போன்றவற்றை பயன்படுத்துவதால் சாகுபடி செலவு கணிசமாக குறையும்.

‘ஆட்டு எரு அவ்வருடம்
மாட்டு எரு மறுவருடம்‘
என்பதற்கிணங்க விளைச்சல் அதிகமாக இருக்கும் என்பது நம்முடைய முன்னோர்களின் கூற்று.

தற்போது இரசாயன உரங்களின் விலை உயர்வால் இந்த இயற்கை உரங்களுக்கு கிராக்கி ஏற்பட்டு அவற்றின் விலையும் தற்போது கணிசமாக உயர்ந்துள்ளது என்பதை நாம் கண்கூடாக பார்க்கிறோம்.

**விவசாயிகளின் மனநிலை எப்படி?**

அன்று அள்ளி அள்ளி கொடுத்த நிலம் இன்று கிள்ளி கிள்ளி தருகின்றன. இதற்கான காரணமாக இராசயன உரங்கள் பயன்பாடுகள் தான் என்பதை 100க்கு 65% விவசாயிகள் உணரத் தொடங்கி உள்ளதன் விளைவுகளே இரசாயன உரங்களின் மீது இருந்த மோகம் படிப்படியாக குறைந்து இயற்கை உரத்தை நாடும் மனநிலைக்கு வந்து விட்டனர்.

**இயற்கை உரம் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள்?**

இவை மண்ணின் கட்டமைப்பை மாற்றிடவும், நுண்ணுயிர் பெருக்கத்திற்கு உதவுகின்றன. மேலும் மண்ணின் ஈரப் பதத்தை தக்க வைக்கவும் மண்ணில் காற்றோட்ட வசதியும் ஏற்படுத்திடவும் உதவுகின்றன. மண்ணிற்கு உயிரோட்டத்தை தருவதில் முக்கிய காரணமாக இயற்கை உரங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# நிலக்கடலையில் களை மேலாண்மை

சேலம், ஜூலை 14

அட்மா திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம் ஆரிகவுண்டம்பட்டி கிராமத்தில் நிலக்கடலையில் வயல் சூழல் ஆய்வு குறித்த பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பு நடைபெற்றது.



25 விவசாயிகள் 5 குழுக்களாக பிரிந்து முன்நிலை செயல் விளக்கம் அமைக்கப்பட்ட நிலக்கடலை பயிரின் நிலை கோரை, அருகம்புல், சீமை தண்டு கீரை, சாரணை, அமராந்த்ஸ், முக்குரட்டை ஆகிய களைகளை கண்டறிந்த பிறகு களைகளை சேகரம் செய்து கலர் வண்ண அட்டையில் களைகளின் மாதிரி படங்களை வரைந்து களைகளின் பெயர் வாரியாக எண்ணிக்கை கணக்கிப்பட்டது.

ஒவ்வொரு குழுக்களிலும் களைகளின் எண்ணிக்கை ஏற்ப ஒரு கைக்களை எடுக்க வேண்டும் என்று முடிவு எட்டப்பட்டது. மேலும் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பயிற்சியாளராக ஓய்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் கே.பழனிசாமி விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர் ச.தனபால், உதவி தொழில்நுட்ப மேலாளர் சி.சரஸ்வதி ஆகியோர் உடன் இருந்தனர்.



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# ICAR - இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் (ICAR-IISR) மஞ்சளுக்கான பிரத்யேக மஞ்சள் ஸ்பெசல் நுண்ணூட்டச்சத்து - ஒரு பார்வை

சேலம், ஜூலை 14

இது IIHR-ன் சகோதர நிறுவனமான IISR-இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு காப்புரிமை பெறப்பட்டது. மஞ்சள் பயிரில் ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்கி, மகசூலை 10% முதல் 25% வரை அதிகரிக்க இந்தத் தொழில்நுட்பம் உதவுகிறது.

**நன்மைகள்**

**ஊட்டச்சத்து பற்றாக்குறை நீங்கும் :** இலைகள் மஞ்சளா வதைத் தடுத்து, செடியின் வளர்ச்சியைத் தூண்டுகிறது.

**உயர்ந்த மகசூல் :** மஞ்சள் கிழங்கின் அளவு, எடை மற்றும் தரத்தைஉயர்த்துகிறது.

**குர்குமின் அளவு அதிகரிப்பு :** மஞ்சளில் உள்ள மருத்துவக் குணமிக்க 'குர்குமின்' அளவை மேம்படுத்துகிறது.

**பயன்படுத்தும் முறை அளவு :** 1 கிலோ மஞ்சள் ஸ்பெசல் பொடியை 200 லிட்டர் தண்ணீரில் நன்றாக கரைக்க வேண்டும். மஞ்சள் நட்ட 60-வது நாளில்முதல் முறையும், 90-வது நாளில் இரண்டாவது முறையும் தெளிக்க வேண்டும். இதனை இயற்கை அல்லது உயிர்ம விவசாயத்திலும் தாராளமாகப் பயன்படுத்த லாம். மஞ்சள் பயிரிடும் மண்ணின் கார அமிலத்தன்மைக்கு இந்த உரம் இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

**IISR Power Mix T :** இது pH 7-க்குக் குறைவான அமிலத் தன்மை கொண்ட மண்ணிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**IISR Power Mix T+ :** இது pH 7-க்கு அதிகமான காரத்தன்மை கொண்ட மண்ணிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

### இதில் அடங்கியுள்ள சத்துக்கள்

மஞ்சள் பயிரின் சீரான வளர்ச்சிக்குத் தேவையான அத்தியாவசிய நுண்ணூட்டச்சத்துக்கள் இதில் அறிவியல் பூர்வமான விகிதத்தில் கலக்கப்பட்டுள்ளன :

**துத்தநாகம்** : இலைகளின் வளர்ச்சி மற்றும் குர்குமின் உற்பத்திக்கு உதவுகிறது.

**இரும்புச்சத்து** : பச்சையம் உருவாகி இலைகள் அடர் பச்சையாக மாற உதவுகிறது.

**மாங்கனீசு &போரான்** : கிழங்கு பெருப்பதற்கும், தரமான மஞ்சள் உருவாவதற்கும் வழிவகுக்கிறது.

**NPK பயன்பாட்டுத் திறன்** : இதனை இலைவழியாகத் தெளிக்கும் போது, வேர் மூலம் நாம் கொடுக்கும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை (NPK Fertilizers) பயிர்கள் இன்னும் வேகமாக உறிஞ்சிக் கொள்ளும் திறன் அதிகரிக்கிறது.

இவ்வாறு விவசாயிகள் பயனடையுமாறு சேலம் மாவட்டம், தாரமங்கலம் வேளாண்மை துறை மூலம் கேட்டுக் கொள்கிறோம்.

# இப்கோ - சங்கட ஹரன் பீமா யோஜனா

சென்னை, ஜுலை 14

இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா மூலம் விவசாயிகள் இலவச விபத்துக் காப்பீடு பெரும் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இப்கோ நானோ உரங்கள் (நானோ யூரியா, நானோ டிஏபி) மற்றும் இப்கோ யூரியா, டிஏபி, காம்ப்ளக்ஸ் உரங்களுடன் விவசாயிகள் இலவச விபத்துக் காப்பீடு பெறலாம். ஒரு பாட்டில் நானோ உரம் வாங்கினால் ரூ.10000 காப்பீடு. அதிகபட்சம் ரூ.2 லட்சம் வரை காப்பீடு பெறலாம். (ஒரு வருடத்திற்கு 20 பாட்டில் நானோ உரம் வரை காப்பீடு பெறலாம்).



# உயிர்ம வேளாண்மையில் ஊட்டச்சத்து மேலாண்மை

திருச்சி, ஜூலை 14

பயிர் வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் தேவைப்படும் தனிமங்களே ஊட்டச்சத்துக்கள் என்றழைக்கப்படுகின்றன. பயிர் வளர்ச்சிக்கு 17 வகைத் தனிமங்கள் தேவப்படுகின்றன. ஊட்டச்சத்துக்கள் பயிர்களின் உற்பத்தியை நிர்ணயிக்கும் முக்கியக் காரணியாகும். 30 முதல் 40 சதவிகிதம் வரை உற்பத்தி, ஊட்டச்சத்துக்கள் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. பயிர் வளர்ச்சிக்கும், சிறந்த விளைச்சலுக்கும் பரிந்துரைக்கப்பட்ட ஊட்டச்சத்துக்களின் அளவை குப்பை எரு, தொழு உரம், கம்போஸ்ட் உரம், மண் புழு உரம், பசுந்தாள் உரம், பசுந்தழை உரங்கள், உயிர் உரங்கள் போன்ற உயிர்ம உரங்களை பயன்படுத்துவது சிறந்த ஊட்டச்சத்து மேலாண்மையாகும் என திருச்சிராப்பள்ளி மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி தெரிவித்துள்ளார்.

**பசுந்தாள் உரங்கள்** : தக்கைப்பூண்டு, சணப்பு போன்ற பசுந்தாள் உரங்களைச் சாகுபடி செய்யும் நிலத்திலேயே பயிரிட்டு அவை பூக்கும் தருணத்தில் மண்ணுடன் மடக்கி உழவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்கையில் 15 முதல் 20 டன் பசுந்தாள் உரம் மண்ணிற்குக் கிடைப்பதோடு 50 முதல் 70 கிலோ தழைச்சத்து, 10-20 கிலோ மணிச்சத்து, 40-60 கிலோ சாம்பல் சத்து ஓர் எக்டர் நிலத்திற்குக் கிடைக்கும்.

**பயன்கள்** : பசுந்தாள் உரமிடுவதால் மண்ணின் அமைப்பு மேம்படும், நீர்பிடிப்புத் திறன் அதிகரிக்கும், மண் அரிமானம் குறையும். மேலும், அவை மண்ணிற்கு ஊட்டம் அளித்து மண் வளத்தை காக்கும்.

**பசுந்தழை உரங்கள்** : வயல் வரப்புகள், தரிசு நிலங்கள், சாலையோரங்கள் மற்றும் காடுகளில் வளரும் புங்கம், வேம்பு, வாகை, கிளைரிசிடியா மரங் களின் இலைகள், மரத்தின் சிறு குச்சி, கொம்புகள் ஆகியவையே பசுந்தழை உரத்தின் மூல மாகும். அவற்றைநிலத்தில் இடுவதால் மண்ணின் இயற்பியல் குணங்கள் மேம்படும். காரத் தன்மை உள்ள மண் சீர்திருத்தப் படும் மற்றும் வேர் முடிச்சு நூற் புழுக்களைக் கட்டுப்படுத்தும்.

**மண் புழு உரம் :** மண்புழு உரத்தில் தழைச் சத்து - 2.2 சதவிகிதம், மணிச் சத்து - 1.5 சதவிகிதம், சாம்பல் சத்து - 2.0 சதவிகிதம், சுண்ணாம்புச் சத்து - 2.4 சதவிகிதம், மெக்னீசியம் - 0.3 சதவிகிதம், கந்தகம் - 0.5 சதவிகிதம் மற்றும் அனைத்து நுண்ணூட்டச் சத்துக்கள் சிறிய அளவிலும் உள்ளது. மண்புழு உரத்தில் உள்ள அனைத்துச் சத்துக்களும் பயிர் வளர்ச்சிக்கு எளிதில் கிடைக்கும்.

**உயிர் உரங்கள் :** மண்ணில் இடப்படும் அனைத்து இடு பொருட்களும் சிதைவுற்று அங்கக மூலங்களாக மாற்றம் பெறுவதற்குக் கோடிக்கணக்கான நுண்ணுயிரிகள் பெரும் பங்கு



பெறுவதற்குக் கோடிக்கணக்கான நுண்ணுயிரிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. இவற்றை மண்ணில் இடும் போது மண்ணில் அதன் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதோடு, பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களையும் மேம்படுத்திப் பயிர்களுக்கு ஊட்டமளிக்கிறது.

**அசோஸ்பைரில்லம் :** அசோஸ்பைரில்லம் என்ற நுண்ணுயிர் பாக்டீரியா வகையைச் சேர்ந்தது. மண்ணில் வாழும் இந்த நுண்ணுயிர் காற்றில் உள்ள தழைச்சத்தை ஈர்த்துப் பயிர் களுக்கு அளிக்கின்றது. இதைத் தாவரம் எளிதில் எடுத்துக் கொள்ளும், அசோபைரில்லம் நெல் மற்றும் தானிய வகைப் பயிர்களுக்கு ஏற்றது.

**ரைசோபியம் :** ரைசோபியம் பொதுவாகப் பயறுவகை பயிர்களின் வேர் முடிச்சுகளில் காணப்படும். இது வளிமண்டலத் திலுள்ள நைட்ரஜன் வாயுவை அமோனியாவாக மாற்றித் தாவரங் குகளுக்கு அளிக்கின்றது. ரைசோபியம் நுண்ணுயிர் உரம் இடுவதன் மூலம் சுமார் 15-25 சதவிகிதம் வரை விளைச்சல் அதிகரிக்கும்.

**பாஸ்போபேக்டீரியா :** பாஸ்போபேக்டீரியா என்ற நுண்ணுயிர் வகை மண்ணிலும், வேர்ப்பகுதியைச் சுற்றிலும் ஏராளமாக இருக்கும். இவை மண்ணிலுள்ள கரையாதமணிச்சத்தினைக் கரைத்து தாவரங்கள் எடுத்துக் கொள்ளும் வகையில் மாற்றுகின்றது.

**பொட்டாஷ் மொபிலைசிங் பேக்டீரியா :** இவை மண்ணிலுள்ள கரையாத பொட்டாசியம் சேர்மங்களைக் கரைத்து தாவரங்களின் வேர் அமைப்புக்கு எடுத்துச் சென்று பயிர்களின் வளர்ச்சிக்கு உதவுகின்றன.

**அசோபாஸ் :** இதில் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பேக்டீரியா ஆகியவை உள்ளன. இவை பயிர்களுக்கு தழைச்சத்து மற்றும் மணிச்சத்து கிடைக்க உதவுகிறது.

**நீலப்பச்சை பாசி :** பத்து நாள் வயதுள்ள நீலப்பச்சைப் பாசியினை மண் கலந்து ஓர் எக்டர் நெல் வயலுக்கு 10 கிலோ என்றளவில் இடலாம்.

**அசோலா :** நெற்பயிரோடு சேர்த்து வளர்க்கும் போது 10-12 டன் அசோலா கிடைக்கும். முதல் களை எடுக்கும் போது சேற்றில் மதித்து அமிழ்த்து விட்டால் 10 நாட்களுக்குள் மக்கித் தழைச்சத்து சீராகக் கிடைக்கும்.

# ஊறுகலவைத் தொழில்நுட்பத்தின் மூலம் இறைச்சிப் பொருள்களின் மதிப்புக்கூட்டல் - சிறுதொழில் முனைவோருக்கான ஒரு அணுகுமுறை

இறைச்சியில் பொதுவாக சுவையூட்டும் பொருள்களை அதனுள் ஊடுருவச் செய்வதினால் அதன் சுவைத்தன்மை, தசை இழையமைப்பு மற்றும் சாறுத்தன்மைகள் அதிகரிக்கபடுகிறது. எனவே ஊறுகலவை என்பது, உப்பு, மசாலா பொருள்கள், கரிம அமிலம் மற்றும் மூலிகைகள் போன்றவை பல்வேறு அளவுகளில் கலந்த கரைசலை இறைச்சியோடு சேர்த்து ஊறவைக்கும் முறை ஆகும். ஊறுகலவை முறையானது இறைச்சியின் தோற்றத்தை மேம்படுத்துவதோடு, அதன் தரம், செயலாக்கப் பண்புகள் மற்றும் சேமிப்பு காலத்தையும் அதிகரிக்க உதவுகிறது.

உடனடியாக சமைக்கக்கூடிய மற்றும் எளிதில் பயன்படுத்தக்கூடிய உணவுகளில் கோழி இறைச்சிக்கான தேவை அதிகரித்து வருவதினால், கோழி இறைச்சியில் ஊறுகலவை தொழில் நுட்பத்தின் தேவை கோழி இறைச்சி தொழில் துறையில் மிகமுக்கிய பங்கினைப் பெற்றுள்ளது. இறைச்சி ஊறுகலவையின் முக்கிய நோக்கம், பல்வேறு மசாலாப் பொருள்கள், சுவையூட்டிகள் மற்றும் புதுமையான காரணிகள் ஊறுகலவையில் சேர்ப்பதன் மூலம் பச்சை இறைச்சியின் உணர்வுப் பண்புகளை மேம்படுத்துவதாகும்.

**ஊறுகலவையின் வகைகள்**

**1. அமிலத்தன்மை கொண்ட ஊறுகலவைகள் :** கொடிமுந்திரி மது, அசிடிக் அமிலம், லாக்டிக் அமிலம், தக்காளி மற்றும் எலுமிச்சை பழச்சாறுகள் போன்ற அமிலம் கொண்ட பொருட்கள், இறைச்சியில் உள்ள புரதப் பிணைப்புகளைத் தளர்த்தி, இறைச்சியை மிகவும் மென்மையாகின்றன. இதனால் அந்தச் சாறுகள் இறைச்சியினுள் எளிதாக உறிஞ்சப்படுகின்றன. மேலும் நுண்ணுயிர் எதிர்ப்புப் பண்புகள் கொண்ட பொருளாகவும் அமில ஊறுகலவைகள் இருப்ப தினால் இறைச்சிப் பொறிகளின் தயாரிப்பில் அதிக வரவேற்பைப் பெற்று வருகின்றன. இந்த அமிலங்கள் 0.25% அளவில் சேர்ப் பதன் மூலம் இறைச்சியின் உணர்வுப் பண்புகள் பாதிக்கப்படாமல் அதன் சேமிப்புக்காலம் மேம்படுத்தப்படுகிறது.

**2. தயிர் ஊறுகலவைகள் :** புளிக்க வைக்கப்பட்ட பால் பொருள் களான மோர், தயிர், இந்த தயிர் போன்ற பால் சார்ந்த ஊறுகலவைகள் இறைச்சியில் பரவலாக பயன்படுத்தப்படுகின்றன.

பால் பொருள்களில் உள்ள கால்சியம், இறைச்சியில் உள்ள நொதிகளை செயல்படுத்தி அதன் மென்மைத்தன்மையை அதிகரிப்பதன் மூலம் இறைச்சி மேலும் மிருதுவடைகிறது. மோர் மற்றும் புளித்த பால் போன்ற ஊறுகலவையானது இறைச்சிப் பொருள்கள் மற்றும் வறுக்கப்பட்ட இறைச்சிப் பொருள்களிலும் மென்மை, சாறுத்தன்மை மற்றும் நிறம் மேன்மையடையச் செய்கிறது.

**3. நொதி ஊறுகலவைகள் :** பப்பாளி, அன்னாசிப்பழம் மற்றும் பசளிப்பழலத்தில் உள்ள பப்பைன் மற்றும் புரோமெலைன் போன்ற நொதிகள் இறைச்சியை மென்மையாக்கச் செய்யும் செயல்பாட்டுத் தன்மையைக் கொண்டுள்ளது. இந்த நொதிகளானது இறைச்சில் உள்ள தசைநார் புரதங்களின் மீது செயல்படுவதால், இணைப்புத் திசுக்கள் சிதைவடைந்து உடைவதால் இறைச்சி மிருதுவடைகிறது.

**4. இயற்கை உயிரக எதிர்ப்பிகள் :** இலைகள் மற்றும் பழங்களில் காணப்படும் இயற்கை உயிரக எதிர்ப்பிகளான பாலிபீனாலிக் சேர்மங்கள் நிறைந்தவையாக உள்ளன. எனவே, இவை பசை, சாறு மற்றும் தூள் போன்ற பல்வேறு வடிவங்களில் சேர்க்கப்படலாம். இவை இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களின் சேமிப்பு காலத்தை அதிகரிக்கும் திறன் கொண்ட இயற்கை பாதுகாப்புப் பொருள்களாக செயல்படுகின்றன. கறியிலைச்செடி, ஓரிகானோ மற்றும் பழச்சாறுகள் போன்றவற்றில் உள்ள இயற்கை உயிரக எதிர்ப்பிகள், ஊறுகலவையில் சேர்ப்பதனால் இறைச்சியில் உள்ள கொழுப்பு ஆக்சிஜனேற்றத்தை குறைக்க உதவுகிறது.

**ஊறுகலவை முறைகள்**

1. மூழ்கச்செய்து ஊறவைக்கும் முறை என்பது மிகப் பழமையான ஊறுகலவை முறையாகும். இதில் இறைச்சி முழுமையாக மரினேட் கலவையில் ஊறவைக்கப்பட்டு, காலப்போக்கில் பரவல் செயல் முறையின் மூலம் அந்தக் கலவையில் உள்ள பொருட்கள் இறைச்சியின் உட்பகுதிக்குள் ஊடுருவிச் செல்கின்றன. இந்த முறையில் ஊறுகலவையில் உள்ள பொருடள்கள் இறைச்சியில் சீராகப் பரவாத காரணத்தினாலும், நீண்ட நேரம் தேவைப்படுவதாலும், பயன்படுத்தக்கூடிய கலவையின் அளவிலும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதால் நடைமுறைக்கு சிரமமானதாக உள்ளது.

2. ஈர ஊறுகலவை முறையில், இறைச்சியை திரவக் கலவையில் முழுமையாக மூழ்கவைக்கப்படுவதால் இறைச்சி மென்மையாகவும், கெட்டுப்போகாமல் பாதுகாக்கவும் செய்கிறது. ஈர ஊறு கலவை பொதுவாக குளிரூட்டப்பட்ட வெப்பநிலையில் குறுகிய நேரத்திற்கு ஊறவைக்கப்பட வேண்டும். ஈர ஊறுகலவைகள் அடிப் படையில் உலர் தேய்ப்புக் கலவைகளான மசாலாப் பொருட்கள்

மற்றும் மூலிகைகள் சேர்க்கப்பட்டு, பின்னர் எண்ணெய் அல்லது வேறு திரவப் பொருட்களுடன் கலந்து பசை குழம்பு வடிவில் தயாரிக்கப்படுகின்றன.

3. உலர் ஊறுகலவை, உலர் தேய்ப்புக் கலவை என்றும் அழைக்கப்படுகிறது. இது உலர்ந்த மூலிகைகள் மற்றும் பல்வேறு உலர் மசாலாப் பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகிறது. உலர் ஊறுகலவையின் முக்கியக் கூறு உப்பு ஆகும். இது இறைச்சியில் உள்ள புரதங்களைச் சிதைத்து, பிற சுவையூட்டும் பொருட்கள் இறைச்சிக்குள் உறிஞ்சப்பட உதவுகிறது. உலர் தேய்ப்புக் கலவை முறையில், இறைச்சியின் மேற்பரப்பில் கலவையை நன்கு ஒட்டச் செய்வதற்காக முதலில் பன்றிக் கொழுப்பு, எண்ணெய் அல்லது தண்ணீர் போன்றவற்றால் இறைச்சியைப் பூசுவது முக்கியமாகும். இதன் மூலம் உலர் கலவையை இறைச்சியின் மேற்பரப்பில் அழுத்திப் படியச் செய்ய முடியும்.

4. மசாலா கரைசலை இறைச்சிக்குள் செலுத்தும் ஊசி ஊறு கலவை முறை, தற்போது அதிகம் பயன்படுத்தப்படும் ஊறுகலவை முறைகளில் ஒன்றாகும். இந்த முறையில் ஊசிகள் இறைச்சிக்குள் துளைத்து அதன் மூலம் மசாலா கரைசல் செலுத்தப்படுவதினால் இறைச்சித் துண்டின் முழுப் பகுதியிலும் மசாலாக் கரைசலானது சீராகப் பரப்பப்படுகிறது. இது ஊறுகலவையைத் துல்லியமான அளவில் செலுத்துவதற்கு உதவுகிறது. மேலும், நீண்ட நேரம் ஊறவைக்கும் முறையின் தேவையை தவிர்க்கிறது. தயாரிப்பு பொருள்களில் ஒரே மாதிரியான தரத்தை உறுதி செய்கிறது.

5. சூழல் கருவி அல்லது டம்ப்ளிங் கருவி மசாலா ஊறுகாலவை முறை என்பது அதிகமாக கோழி இறைச்சியில் பயன்படுத்தப் படுகிறது. இது மதிப்புக்கூட்டப்பட்ட இறைச்சிப் பொருள்களை உருவாக்க உதவுகிறது. இந்த கருவியில் இறைச்சியை மென்மை யாகப் பிசைந்து மசாலா கலவையை ஊடுருவச் செய்கிறது. இதனால், உப்பில் கரையக்கூடிய புரதமான ஆக்டின் மற்றும் மையோசின் போன்ற புரதங்கள் புரதச் சுரப்புகளாக வெளியேறு கின்றன. இதன் விளைவாக இறைச்சிப் பொருள்கள் அதிக சாறுத் தன்மைக் கொண்டதாகவும், இறைச்சியை எளிதாக மெல்லிய துண்டுகளாக வெட்டவும் உதவுகிறது. மேலும், வெப்ப செயலாக் கத்தின் போது புரதங்கள் உறைதலடைந்து, இறைச்சியின் பிணைப்புத் தன்மையும் மேம்படுத்துகிறது. இதுவே, மூடு பொருளாக செயல்பட்டு, இறைச்சித் திசுக்களுக்குள் உள்ள ஈரப்பதத்தைப் உள்ளே தக்கவைக்கவும் உதவுகிறது.

**ஊறுகாலவையினால் இறைச்சியின் தரத்தில் ஏற்படும் நன்மைகள்**

**1. அமிலகாரக் குறியீடு :** ஊறுகலவை செய்யப்பட்ட இறைச்சி மாதிரிகளில் அமிலகாரக் குறியீடு அதிகரிப்பதற்கு, ஊறு கலவையில் உள்ள உப்பு மற்றும் பாஸ்பேட்டுகள், குளோரைடு அயனிகள், தசை நார்களில் உள்ள புரத இழைகளுடன் பிணை கின்றன. இதன் விளைவாக அயனிக் மின்னூட்டம் அதிகரித்து, தசை நார்களின் உள்ளே தள்ளுவிசை உருவாகிறது. தசை நார்களின் உள்ளே உருவாகும் இந்த தள்ளுவிசை, இறைச்சியின் அமிலகாரக் குறியீடு மதிப்பை அதிகரிக்கக் காரணமாக இருக்கிறது.

**2. நீர்கொள்ளும் தன்மை :** தசை நார்களின் நுண்ணமைப்பு தளர்வடைதல், இறைச்சியின் அமிலகாரக் குறியீடு மதிப்பு அதிகரித்தல் மற்றும் உப்பில் கரையக்கூடிய மையோசின், ஆக்டின் மற்றும் ஆக்டோமையோசின் போன்ற புரதங்கள் வெளியேறுதல் ஆகியவை இறைச்சியிலிருந்து நீர் வெளியேறுவதனாலான இழப்பு மற்றும் சமைக்கும் போது ஏற்படும் எடை இழப்பை குறைக்க உதவு கின்றன. அதே சமயம் இறைச்சியின் மென்மை, சாறுத் தன்மை மற்றும் ஈரப்பதத்தைத் தக்கவைக்கும் திறனும் மேம்படுகிறது.

**3. மென்மைத் தன்மை :** அசிடிக் அமிலம் அல்லது சிட்ரஸ் பழச்சாறு போன்ற அமிலக் கூறுகள் இறைச்சியின் அமிலகாரக் குறியீடு அளவைக் குறைக்கின்றன. இதனால் தசைநார் புரதங்கள் வீங்கி, இணைப்புத் திசுக்கள் வலுவிழக்கச் செய்கிறது. மேலும், அன்னாசிப்பழத்தில் உள்ள ப்ரோமேலின் போன்ற இயற்கை நொதி தசை நார்களைச் சிதைத்து, கடினமான இறைச்சித் துண்டுகளை மென்மையாக்க உதவுகின்றன.

**4. கொழுப்பு ஆக்சிஜனேற்றம் :** இறைச்சியில் கொழுப்பு ஆக்சிஜனேற்றம் என்பது, பாலிநிறைவுறா கொழுப்பு அமிலங்கள் வினைத்திறன் மிக்க ஆக்சிஜனுடன் வினைபுரிவதால், கொழுப்புகள் சிதைவடைந்து ஆக்சிஜனேற்றத்தால் கெட்ட நாற்றம் உருவாகும் செயல்முறையாகும். எனவே, ஊறுகலவையில் சேர்க்கப்படும் கிராம்பு, இலவங்கப்பட்டை, ஜாதிக்காய் மற்றும் கருமிளகு போன்ற மசாலாப் பொருட்கள் உயிரக எதிர்ப்பு மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளன. இவை, இறைச்சியில் ஏற்படும் ஆக்சிஜனேற்றத்தை குறைத்து இறைச்சியின் சேமிப்பு காலத்தை அதிகரிக்கிறது.

**5. சாறுத்தன்மை :** உப்பு மற்றும் பாஸ்பேட் உப்புகள் சேர்ப்பதன் மூலம் இறைச்சியின் நீர் தக்கவைப்புத் திறன் அதிகரிக்கிறது. இதனால் சமைக்கும் போது ஏற்படும் ஈரப்பதத்தின் இழப்பு மற்றும்

இறைச்சி சுருங்குதல் போன்றவை குறைகிறது. இதன் விளைவாக இறைச்சிப் பொருள்களின் சாறுத்தன்மை மற்றும் சமைத்தபின் கிடைக்கும் விழுக்காடு அதிகரிக்கிறது.

**6. நறுமணம் மற்றும் சுவைத்தன்மை :** ஊறுகாலவையில் பயன்படுத்தப்பட்ட பொருள்களைப் பொறுத்து (சோயா சாஸ், மசாலாப் பொருட்கள், சர்க்கரை போன்றவை), இறைச்சிக்குள் காரமான அல்லது இனிப்புச் சுவைகளை ஊடுருவச் செய்கிறது.

**7. நிறம் மற்றும் தோற்றம் :** சரியான ஊறுகலவை முறையானது ஆக்சிஜனேற்றத்தைக் குறைத்து, நிறமாற்றத்தைத் தடுத்து, சமைக்கும் போது மற்றும் குளிரூட்டப்பட்ட சேமிப்பின் போது இறைச்சியின் இயற்கை நிறம் பாதுகாக்கப்பட்டு அதன் தோற்றம் மேம்படுகிறது.

**8. பாதுகாப்பு மற்றும் சேமிப்புக் காலம் :** ஊறுகலவைகளில் பொது வாக அமிலச் சேர்மங்கள் மற்றும் இயற்கை உயிரக எதிர்ப்பிகள் (மூலிகைகள் மற்றும் மசாலாப் பொருட்கள் போன்றவை) காணப் படுகின்றன. இவை இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்கள் கெட்டுப் போகச் செய்யும் நுண்ணுயிரிகள் (உதாரணமாக சூடோ மோனாஸ் அல்லது லிஸ்தீரியா) வளர்ச்சியையும், கொழுப்பு சிதை வையும் கட்டுப்படுத்தி இறைச்சியின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கிறது.

**9. இறைச்சியில் உள்ள நுண்ணுயிர்களின் தரம் :** ஊறுகலவை முறையானது, கெட்டுப்போகச் செய்யும் நுண்ணுயிரிகளான சூடோ மோனாஸ் எனப்படும் குளிரூட்டப்பட்ட இறைச்சியில் மிகவும் பொது வாகக் காணப்படும் கெடுதல் நுண்ணுயிரிகள், வெனெல்லா புட்ரிஃபேசியன்ஸ் எனப்படும் துர்நாற்றம் மற்றும் நிறமாற்றத்தை ஏற்படுத்தும் நுண்ணுயிரிகள் மற்றும் என்டெரோபாக்டீரியாக்களின் வளர்ச்சியைத் தடுக்கிறது. மேலும் இறைச்சியின் மூலம் பரவும் நோய்க்கிருமிகளான சால்மோனெல்லா, லிஸ்டீரியா மோனோ சைட்டோஜெனஸ் மற்றும் எஸ்செரிசியா கோலி, கிருமிகளின் வளர்ச்சியைத் தடுக்கிறது. வினிகர் அல்லது சிட்ரஸ் பழச்சாறு போன்ற கரிம அமிலங்கள் மற்றும் உப்பின் சேர்க்கை, இறைச்சியின் அமிலகாரக் குறியீடு அளவைக் குறைப்பதன் மூலம் பாக்டீரியாக்களின் பெருக்கத்தை நேரடியாகத் தடுக்கிறது. இறைச்சியின் நுண்ணுயிரியல் தரத்தை மேம்படுத்துகிறது.

**முடிவுரை :** ஊறுகலவை முறையானது இறைச்சியின் நிறம், சுவை, தசை இழையமைப்பு, மென்மைத் தன்மை, சுவையுணர்வுத் தன்மையை மற்றும் இறைச்சியின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகளை மேம்படுத்துகிறது. மசாலாப் பொருள்கள் மற்றும் மூலிகைகள் சேர்க்கப்பட்ட ஊறுகலவை, உயிரக எதிர்ப்பி மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு பண்புகளைக் கொண்டிருப்பதால், இறைச்சியில்

உள்ள நுண்ணுயிரிகளின் வளர்ச்சியைக் கட்டுப் படுத்தி, அதன் சேமிப்பு காலத்தை அதிகரிக்க உதவுகிறது. மேலும், ஊறுகலவை தொழில்நுட்பம் பல்வேறு புதிய மதிப்பூட்டப்பட்ட இறைச்சிப் பொருள்கள் உருவாக வழிவகுக்கிறது. இது போன்ற எளிமையான தொழில் நுட்பங்களை இறைச்சியில் பயன்படுத்து வதன் மூலம் இறைச்சி மற்றும் இறைச்சி பொருள்களின் தரத்தை அதிகரித்து சிறந்த பொருளாதார இலாபத்தைப் பெறலாம்.

தகவல் : ***அ.வானதி, மு.சுதா, சி.ராமகிருஷ்ணன் மற்றும் சி.மு.தேவதர்சினி, கால்நடை உற்பத்திப் பொருள்கள் தொழில் நுட்பத் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வீரபாண்டி, தேனி – 625 534.***



# நவீன வேளாண்மையில் தாது உப்புக்கட்டிகளின் பயன்பாடு

கால்நடைகள் உயிர் வாழ இன்றியமையாத ஊட்டச்சத்துகள், நீர் , மாவுச்சத்து, புரம் கொழுப்பு உயிர்சத்து மற்றும் தாதுப்புகள் ஆகியனவாகும். இவை கால்நடைகளுக்கு நாம் அளிக்கும் கலப்புத்தீவனம், பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனம் மூலம் கிடைக்கப்பெறுகின்றன. தாதுப்புகளைக் கணக்கில் கொண்டால் அவை பசும்புற்கள், உலர்தீவனங்கள், சாகுபடி செய்யப்படும் நிலத்தின் தன்மை மற்றும் மண்ணில் அவற்றின் அளவு ஆகியவற்றுக்கு ஏற்ப தாவரங்களுக்குச் சென்றடைந்து அதன் மூலம் கால்நடைகளுக்குக் கிடைக்கிறது.

தற்போதைய மண்ணின் தன்மையை 100 வருடங்களுக்கு முன்புள்ள தாது உப்புகளின் அளவுடன் ஒப்பிட்டால் ஏறத்தாழ 87 சதவிகிதம் அளவு குறைந்து காணப்படுகிறது. இதற்கு முக்கியக் காரணங்கள் தீவிர முறையில் வீரிய ரக பயிர் சாகுபடி மற்றும் பண்ணையாளர்களின் முறையற்ற ஃ கட்டுப்பாடற்ற முறையில் இராசயன உரங்கள் பயன்படுத்துதலும் ஆகும்.

### தாதுப்புகளின் தேவை

தாதுப்புகள் உடலின் கட்டமைப்புக்கு மட்டுமின்றி செல் – திசுக்களின் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் இன்றியமையாத தாகும். ஊடலின் தாதுப்புகளின் தேவையினை அளவினைப் பொறுத்து வகைப்படுத்துவர். மிகவும் குறைவான அளவில் தேவைப்படும் உப்புகளை நுண்தாது உப்புகள் என வழங்குவர். பொதுவாக 15 முக்கியத் தாதுப்புகள் உடலின் செயல்பாட்டிற்கு இன்றியமையாதாகக் கருத்தப்படுகின்றன. அவை :

- சுண்ணாம்புச்சத்து எலும்பு பல் வளர்ச்சி மற்றும் பால் உற்பத்திக்கு
- பாஸ்பரம் எலும்பு வளர்ச்சி செல்களின் எரிசத்தி வினைகளுக்கு மற்றும் இனவிருத்தித்திறனுக்கு
- மக்னிசியம் – எலும்பு வளர்ச்சி, செல்களின் எரிசத்தி வினைகளுக்கு
- மாங்கனிசு – உடலின் வளர்சிதை மாற்றங்களுக்கு
- சோடியம் – உடலின் நீர் சமநிலை , தசை மற்றும் நரம்பு மண்டலச் செயல்பாட்டிற்கு

● பொட்டாசியம் உடலின் நீர் சமநிலை தசை மற்றும் நரம்பு மண்டலச் செயல்பாட்டிற்கு சவ்வுடு பரவலுக்குரிய கட்டுப்பாடு பொதுவாகப் பண்ணையாளர் தாதுப்பைக் கறவை மாடுகளின் பால் உற்பத்திக்கு மட்டுமே இன்றியமையாததாகக் கருதி அளித்து வருகின்றனர்.

ஆனால் அவை கன்றுக் குட்டிகளிலிருந்து அளிக்கப்பட்ட வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். கரிமத் தாதுப்புகளான விலங்கின மற்றும் தாவரங்களிலிருந்து கிடைக்கும் உப்புகள் இராசயன உப்புகளைவிட உடலில் அதிகம் உறிஞ்சப்படும் தன்மை கொண்டது.

இவ்வாறு உடலின் அனைத்து அத்தியாவசியச் செயல்பாடு களுக்கும் இன்றியமையாத தாதுப்புகள் பல்வேறு வகைகளில் கால்நடைகளுக்குக் கிடைக்கும்படி செய்யலாம். **அவை :**

● மண்ணில் தாதுப்புகளின் செரிவை அதிகரித்து அதன் மூலம் சாகுபடி செய்யும் தீவனப்புற்கள் மேய்ச்சல் புல்வெளியில் அளவை அதிகரித்துக் கால்நடைகளுக்குக் கிடைக்கும்படி செய்யலாம். ஆனால் இது தேவையற்ற அதிகச் செலவினை ஏற்படுத்தும்.

● கால்நடைகளுக்கு நேரடியாக உணவு அல்லது குடிநீர் மூலமாகக் கலந்து அளித்தோ

● தனித்தனியே கால்நடைகளின் வாயில் தாதுப்புக் கலவைத் திரவம் ஃகூழ் வகையில் அளித்தோ

● அசையுன் இரைப்பையில் தங்கிச் சிறிது சிறிதாக உடலுக்கு அளிக்கும் ஊசி மூலமாக

● தாதுப்புக் கட்டிகளாகவோ அளிக்கலாம்.

**தாது உப்புக் கட்டிகள்**

தாதுப்புக் கட்டிகள் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட தாதுப்புக் கலவையை நிருணயிக்கப்பட்ட அளவில் கலந்து அவற்றைப் பிணைப்பான் உடன் சேர்த்துக் கட்டிகளாக மாற்றிக் கால்நடை



களின் கொட்டகைகளில் எல்லா நேரங்களிலும் கிடைக்கும்படி வைத்திருப்பதே ஆகும்.

தாதுப்புக் கலவை தயாரிப்பதில் கூடுதல் கவனம் தேவை. ஏனெனில் அதிக அளவிலானஒரு தாதுப்புத் தீங்கினை விளைவிக்கலாம் அல்லது பிற தாதுப்புகள் பயன்படும் அளவினைப் பாதித்துச் சமநிலை அல்லாத தன்மையை உருவாக்கும்.

தாதுப்பு குறைபாடு மிகவும் சிறிய அளவில் உள்ளபோது கால்நடைகள் குறைப்பாட்டிற்கான அறிகுறி ஏதுமின்றி ஆரோக்கியமானதாகவே காணப்படும். ஆனால், குறைந்த செயல்பாடு மற்றும் குறைந்த உற்பத்தித் திறன் பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும், எனவே கலப்புத் தீவனத் தயாரிப் பாளர்கள் தாதுப்புக் கலவை கலந்து அளித்தாலும் கால்நடைப் பண்ணையாளர்கள் கால்நடைக்கொட்டகையில் தாதுப்புக் கட்களை தொங்கவிடுவது அவற்றிற்குத் தாதுப்புக்க கிடைக்க வகை செய்தது போலாகிறது. ஏனெனில் கால்நடைகள் தாதுப்புக் குறைபாடு உள்ளது போல் தோன்றினால் அவை தாமாகவே சென்று கடடிகளில் இருந்து தங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் தன்மை கொண்டது. எனவே அதற்கு ரு வாய்ப்பை அளிக்கும் விதமாகத் தாதுப்புக் கட்டிகள் தொங்க விடுதல் அவசியம். தாதுப்புக் கட்டிகளைக் கொட்டகையின் நடுவில் தொங்கவிட்டடோ அல்லது சுவரில் நிலையாக அமைத்தோ கிடைக்கும்படி செய்யலாம். பண்ணையாளர்கள் கால்நடைகள் தாதுப்புக் கட்டிகளை அதிகம் எடுத்துக்கொண்டு அதனால் நச்சுத்தன்மை ஏற்பட்டுவிமோ என்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை. இவற்றின் மூலக்கூறு வாய் பாடானது தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிலே இருக்கும். மேலும் கால்நடைகள் இயல்பாகவே தங்களின் தேவையைப் பூர்த்தி செய்தவுடன் நிறுத்திக்கொள்ளும் பண்பு கொண்டது.

எனவே, பண்ணையாளர்கள் தங்களின் கால்நடைகளுக்குத் தாதுப்புக் கலந்த கலப்புத் தீவனம் அளிக்கும்போதும் தாதுப்புக் கட்டிகளைக் கொட்டகையில் கட்டி கால்நடைகளுக்குக் கிடைக்க வழி செய்தால் உற்பத்தித் திறனை மேம்படுத்தி அதிக இலாபம் ஈட்டலாம்.

தகவல் : *யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை. தொடர்புக்கு : 0422-2669965*

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID

BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741